**இ.ம.எண்.4/2023 உள்**

**அ.வ.எண்.261/2015**

**தேதி:9.6.2023**



**உத்தரவு**

இம்மனுவானது மனுவில் கண்ட எதிர்பார்ப்பு 2ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்க்க அனுமதித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை பரிசீலிக்கும்போது தாவா 2ம் அயிட்ட சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், 3ம் அயிட்ட சொத்தை பொறுத்து செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கானது நிலுவையிலிருந்து வந்து மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1 விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது தாவா சொத்திற்கு தென்பக்கமுள்ள வீட்டிற்கு உத்தேச எதிர்மனுதாரர் தான் சொத்தின் உரிமையாளர் என்றும், பிரதிவாதி இல்லை என்றும் தெரிவித்து குறுக்கு விசாரணை செய்ததால் மேற்படி உத்தேச பிரதிவாதியை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க அனுமதிக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் வாதி வீட்டிற்கு தென்புறத்தில் 1ம் பிரதிவாதிக்கு சொத்து எதுவும் இல்லை என்பதும், மேற்படி வீடு 2ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்ற விபரம் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், 1984ம் ஆண்டு முதல் உபயவாதிகள் அவரவர் சொத்தில் வசித்து வருவதாகவும், அசல் வழக்கு தாக்கல் செய்த காலத்தில் 2ம் பிரதிவாதி தான் அவருடைய சொத்தில் உரிமையாளராக இருந்தார் என்றும், ஆனால் வேண்டுமென்றே மேற்படி உத்தேச நபரை தரப்பினராக சேர்க்காமல் விட்டுவிட்டு தற்போது காலம் கடந்து 2ம் பிரதிவாதியை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டுமென சொல்வது பொய்யானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனு மற்றும் எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளை பரிசீலித்து அசல் வழக்கினை பார்வையிடும்போது அசல் வழக்கானது கடந்த 22.12.2015-ம் தேதியில் தாவா 2ம் அயிட்ட சொத்துக்கள்

வாதிகளுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்று விளம்புகை செய்யக்கோரியும், மேற்படி சொத்தினை வாதிகள் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ எவ்வித இடையுறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராதினை பரிசீலிக்கும்போது 1ம் பிரதிவாதி தாவா சொத்திற்கு தென்புறத்தில் இருப்பதாகவும், கடந்த 2014–ம் வருடம் பிரதிவாதி கடை மற்றும் வீடு ஆகியவற்றை இடித்துவிட்டு வாதிகள் ஊரில் இல்லாத நேரத்தில் தாவா சொத்தினை ஆக்கிரமித்து கட்டுமானம் கட்டிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டிருப்பது தெரிய வருகிறது.

மனுதாரர்கள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் பிரதிவாதியின் சொத்திற்கு 1ம் பிரதிவாதி உரிமையாளர் இல்லை என்றும், மேற்படி சொத்திற்கு உத்தேச பிரதிவாதி தான் உரிமையாளர் என்பதை வா.சா.1–ன் குறுக்கு விசாரணையின்போது தெரிய வந்ததால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதிட்டார்.



எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோதே தாவா சொத்திற்கு உத்தேச பிரதிவாதிதான் உரிமையாளர் என்றும், 1ம் பிரதிவாதிக்கும் தாவா சொத்திற்கு தென்புறமுள்ள சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என குறிப்பிட்டுள்ளதாகவும், உத்தேச பிரதிவாதியான ரேவதி கடந்த 3.6.2005–ம் தேதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், எனவே மேற்படி ரேவதி இவ்வழக்கிற்கு அவசியமான நபர் என்று தெரிவித்து கடந்த 22.8.2014–ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டபோதிலும், உத்தேச எதிர்மனுதாரரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க மனுதாரர்கள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் முன்னிட்ட வாதங்களை பரிசீலித்து இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

எதிர்வழக்குரையை பார்வையிடும்போது 1ம் பிரதிவாதி அவரது சொத்தை கடந்த 29.2.1984–ம் தேதியில் கிரையம் பெற்றுள்ளதாகவும், கடந்த 13.6.2005–ம் தேதி 2ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருவதாகவும், அதில் வேறு நபர்களுக்கு பாத்தியம் இல்லை என குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளபோதிலும் மேற்படி ரேவதியை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க மனுதாரர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு வா.சா.1–ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது உத்தேச எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு தென்புறமுள்ள சொத்திற்கு உரிமையாளர் என்பது தெரிய வந்ததாக சொல்லியிருப்பது ஏற்புடையதாக இல்லை.

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள வா.சா.1–ன் முதல்நிலை சாட்சியத்தை பார்வையிடும்போது மேற்படி முதல்நிலை சாட்சியம் வாக்குமூலமானது கடந்த 7.11.2022–ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் பத்தி 4–ல் உத்தேச 2ம் பிரதிவாதி தாவா சொத்தில் அருகில் உள்ள மற்றொரு சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருவதை



மறுத்து சாட்சியமளித்திருப்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.1–ன் முதல்நிலை சாட்சியம் மற்றும் இம்மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் ஆகியவற்றை ஒருசேர பரிசீலிக்கும்போது இம்மனுவில் சொல்லியுள்ள சங்கதி தவறானது என்பது தெரிய வருகிறது. எனினும், மேற்படி உத்தேச பிரதிவாதி அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கப்பட்டால்தான் இவ்வழக்கில் ஒரு இறுதியான முடிவு எடுக்க முடியும் என்பதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனினும், இம்மனுவானது சுமார் 8 ஆண்டு காலத்திற்கு பிறகு அதாவது 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு தென்புறமுள்ள சொத்தில் எந்த உரிமையும் இல்லை என தெரிவித்து உத்தேச பிரதிவாதிக்கு தான் உரிமை மூலம் உள்ளதாக தெரிவித்த பிறகும் இதுபோன்ற மனுவை தாக்கல் செய்யாமல் காலதாமதமாக தாக்கல் செய்திருப்பதால் மனுதாரருக்கு செலவுத்தொகை விதித்து இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

அதன்படி, மனுதாரர்களுக்கு எதிராக ரூ.5000/– செலவுத்தொகை விதித்தும், மேற்படி செலவுத்தொகையை வரும் 16.6.2023–ம் தேதிக்குள் எதிர்மனுதாரரின் வழக்கறிஞரிடம் நேரடியாக வழங்கி அதற்கான குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்தில் இம்மனுவானது அனுமதிக்கப்படும் என்றும், தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க – 16.6.2023.

P KUMAR Digitally signed by P KUMAR Date: 2023.06.09 18:29:14 +0530

மு.மா.உ.நீ(மு.கூ.பொ),

அம்பை.